**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண். 304/2020**

**பி.வா.சா. –1 ( கவிதா)**

**நாள். 06.09.2024**

**சாட்சி மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**நான் 9ம் வகுப்பு படித்துள்ளேன். என் கணவர் 5ம் வகுப்பு வரை படித்துள்ளார். நான் குடும்ப தலைவியாக உள்ளேன். என் கணவர் முன்பு டிராவல்ஸ் தொழில் செய்து வந்தார். தற்போது உடல்நிலை சரியில்லை என்பதால் தொழில் எதுவும் செய்யவில்லை. கடந்த 4 வருடங்களாக தொழில் செய்யவில்லை. எனக்கு 1 மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர். என் மகளுக்கு திருமணம் ஆகிவிட்டது. என் மகளுக்கு ஜுன் 2019 ல் திருமணம் நடந்தது. தாவா கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட பின்புதான் என் மகளின் திருமணம் நடந்தது என்றால் சரிதான். சாட்சி கிரைய ஒப்பந்தம் இல்லை என்றும் அடமானம்தான் என்று சொல்கிறார். தற்சமயம் நான் திண்டுக்கல் ராம்நகரில் வழக்கு தாவாச் சொத்தில்தான் குடியிருக்கிறேன். ஒரு வீடு வாடகைக்கு விட்டு மற்றொரு வீட்டில் நாங்கள் இருக்கிறோம். 2016 முதல் 2020 வரை எனக்கும் என் கணவருக்கும் எந்தவித கருத்து வேறுபாடும் இருக்கவில்லை என்றால் சரிதான். தற்போது என் கணவரும் நானும் ஒரே வீட்டில்தான் வசித்து வருகிறோம் என்றால் இல்லை. பிரிந்து வசித்து வருகிறோம். கடந்த 4 வருடங்களாக பிரிந்து வாழ்கிறோம். வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய போது நானும் என் கணவரும் ஒன்றாகத்தான் வசித்து வந்தோம். என் பதில் அறிவிப்பில் நானும் என் கணவரும் 2 ஆண்டுகளாக பிரிந்து வாழ்ந்து வருவதாக சொல்லியிருந்தால் அது தவறுதானே என்றால் ஆமாம். வாதியை எனக்கு எவ்வளவு காலமாக தெரியும் என்றால் இதுநாள்வரை தெரியாது. என் கணவருக்கு வாதியை தெரியுமா என்றால் வாதியின் அப்பாவை தெரியும். 21.03.2016ல் நானும் வாதியும் சந்தித்துக் கொண்டோமா என்றால் நான் அவரை பார்க்கவில்லை. வா.சா.ஆ–2 ல் உள்ள கையொப்பம் என்னுடையதுதானா என்றால் கையொப்பம் மட்டுந்தான் என்னுடையது. வா.சா.2.ல் உள்ள மற்றொரு கையொப்பம் யாருடையது என்று எனக்கு தெரியாது. வா.சா.2ல் சாட்சிகள் என்று குறிப்பிட்ட இடத்தில் 2 பேர்கள் கையொப்பம் போட்டுள்ளார்கள். அவர்களாவது யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரங்களை நான் படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.**

நான் கொடுத்த அறிவுரையின் பேரில்தான் இந்த எதிர்வழக்குரை தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். என் கணவர் தாவா கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் போடவில்லை. என் எதிர்வழக்குரையில் என் கணவர் கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் போட்டதாக சொல்லப்பட்டிருந்தார் அது பொய் என்றால் சரிதான். தாவா கிரைய ஒப்பந்தம் வீடு கிரையம் வாங்குவதற்காக எழுதப்பட்ட உண்மையான கிரைய ஒப்பந்தம்தான் என்றும் தற்போது வழக்கிற்காக கடன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5. என் கணவர் தான் என்னிடம் கொடுத்தார். மேற்படி ஆவணம் நான் கேட்டதால்தான் என் கணவர் எனக்கு கொடுத்தார் என்றால் சரிதான். தாவா கிரைய ஒப்பந்தத்தில் மூன்று ஆண்டு கால அவகாசம் போட்டதற்கு காரணம் என் மகளின் திருமணம் முடியும் வரை நாங்கள் அந்த வீட்டில் இருக்க வேண்டும் என்பதால்தான் என்றால் சரியல்ல. என் மகளின் திருமணத்திற்கு வாதியும் அவரது தகப்பனாரும் வந்திருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. என் மகளின் திருமணத்திற்கு வாதியும் அவரது தகப்பனாரும் வந்திருந்தார்கள் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் தவிர எனக்கும் என் கணவருக்கும் வேறு சொத்துக்கள் இல்லை. நான் 2000ம் ஆண்டு கிரையம் வாங்கிய பத்திரத்தில் என் கணவர் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். அதன்பின்பு எவ்வித கடனும் இல்லாமல்தான் தாவா வீடு கட்டப்பட்டது என்றால் சரிதான். என் மகளின் திருமண செலவிற்கும், என் கணவரின் வியாபார தேவைக்காகவும் தாவா சொத்து கிரையம் பேசப்பட்டது என்றும் தற்போது வழக்கிற்காக மாற்றி பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த தேதியில் கிரைய முன் பணமாக ரூ. 50 லட்சம் பெற்றுக் கொண்டுதான் கிரைய ஒப்பந்த்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. கிரையத்திற்காக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம்தான் தாவா கிரைய ஒப்பந்தம் என்றும் கடனுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வாதிக்கு 50 லட்ச ரூபாய் கொடுக்கும் அளவிற்கு போதுமான வசதி உள்ளது என்றால் சரியல்ல. வாதி எனக்கு நன்கு பழக்கம் என்ற அடிப்படையில்தான் அவருக்கு போதுமான வசதி இல்லை என்று நான் சொல்கிறேன் என்றால் அறிவிப்பு வந்த பிறகு நான் விசாரித்து தெரிந்து கொண்டேன். வாதிக்கு போதுமான வருமானம் உள்ளது என்பதற்கு ஆவணம்

**நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கிற்காக பொய்யாக எதிர் வாதம் செய்கிறேன் என்றும் வாதி கோரிய படி பரிகாரம் வழங்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை:- இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.09.08 15:27:13 +0530

Additional District Judge,

Dindigul.